DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, DENKANIKOTTAI
PROSECUTION WITNESS

SC. No. 131/2023 Crime No. 134/2021 Station Kelamangalam PS

| | | | |
|---|---|---|---|
| Name | Lw1/Pw 1/ Murugan @Arul Vannan | Village | Kelamangalm |
| Father Name | Ambalavanan | Taluk | |
| Age | 52 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | |

**03.01.2025.**

**எதிரிகள் ஆஜர் .**

**முதல் விசாரணை**

சத்தியமாக சொல்கிறேன்.

நான் தற்போது க.எண்.1/67, எஸ்.வி ரோடு தருமபுரி பெயர் இல்லாத பைனான்ஸ் வைத்து நடத்தி வருகிறேன்.

காட்டப்படுட்ம் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும்.

கடந்த 10.06.2021 ம் ஆண்டு கெலமங்கலம் உள்ள செந்தில் நகரில் எனது குடும்பதாருடன் வசிதது வந்த போது மதியம் சுமார் 02.15 மணி அளவில் நானும் எனது பெண் தோழியான திவ்யா எனது வீட்டில் தனியாக இருந்தபோது 3 பேர் முகமூடி போட்டு வந்தார்கன் என்று சொல்லி இன்று நீதிமனற்தில் ஆஜராகிய 3 பேரை திறந்தவெளி நீதிமன்றத்தில் கையை தொட்டு காட்டி அடையாளம் காண்பித்தார்.

அவர்களது பெயர்கள். 2ம் எதிரி ராஜா, 3ம் எதிரி மஞ்சுநாத், மற்றும் 7ம் எதிரி பிரேம் குமார் ஆவார்.

அவர்கள் 3 பேரில் 2ம் எதிரி ராஜா எனது கழுத்தில் கத்தியை வைத்தார் 3 பேரும் எனது வீட்டில் வைத்திருந்த ரூ. 20 லட்சம் எங்கே என்று கேட்டார்கள்.

நான் அவர்கள் 3 பேரிடம் வீட்டில் அவ்வளவு காசு இல்லை என்று கூறினேன்.

முதல் எதிரி கழுத்திலும் 3ம் எதிரியான ராஜா கத்தி வைத்திருந்தார்.

நான் அவர்கள் 3 பேரிடம் வீட்டில் பணம் இல்லை என்று சொன்னவுடன் அவர்கள் 3 பேரும் எனது வீட்டில் உள்ள துண்டு மற்றும் லுங்கியால் எனது கை மற்றும் காலை கட்டிவிட்டு எனது கையில் வைத்திருந்த பணம் ரூ.5000, நான் கழுத்தில் அணிந்திருந்த 3 பவுன் செயின், 3 ½ பவுன் பிரேஸ்லட் ஒன்று, மற்றும் 1 மோதிரம் வெ்ளை கலர் கல் வைத்த ஒரு மோதிம் பிடுங்கி கொண்டார்கள்.

அதற்கு பின்பு ½ ,1/2 பவுண் கல் வைக்காத மோதிரம் 2,

மற்றும் எனது வீட்டில் இருந்த CCTV கேமராவில் இருந்த DVR box பரித்து கொண்டு வீட்டின் வெளியே இருந்த எனது இரு சக்கரவகனம் TN 70 5004 என்ற வாகனத்தை எடுத்து கொண்டு சென்று விட்டார்கள்.

நான் முதல் எதிரியிடம் மேலே சொன்ன நபர்கள் எனது கையை கட்டிய கட்டை கழட்ட சொன்னேன். அவர் வேண்டும் என்றே மெதுவாக கழட்டினார். நான் சமயல் அறையில் உள்ள கத்தியை எடுத்து வந்து வேகமாக கழட்ட சொன்னதை அவர் கேட்கவில்லை.

முதல் எதிரி சுமார் 5 நிமிடம் காலம் எடுத்து கொண்டு தான் எனது கை, காலை கழட்டிவிட்டார்.
நான் முதல் எதிரி திவ்யாவை கூட்டி கொண்டு எனது நணபர் மஞ்சுநாத் வீட்டிற்கு சென்றேன்.
அவரது வீடு டி.கொத்தப்பள்ளியில் இருந்தது. அவரிடம் சென்று நடந்த சம்பவத்தை கூறினேன்.
அவர் உடனடியாக புகார் அளிக்கும்படி கூறினார். நான் நடந்ததை போலீசில் புகார் அளித்தால் அசிங்கமாக இருக்கும் என்றும் அதனால் அளிக்காமல் விட்டு விடாலாம் என்று கூறிவிட்டேன்.
அவர் அதற்கு நான்றாக யோசித்து விட்டு கூறு என்று கூறினார் நான் மறுநாள் காலை 11 மணிக்கு நானும் எனது நண்பர் மஞ்சுநாத்தும் சேர்ந்து கொண்டு போய் நடந்த சம்பவத்தை புகார் அளித்தோம்.
போலீசார் என்னை விசாரித்தார்கள்.
நான் புகார் அளித்த 1 நள் கழித்து எனது வீட்டில் கொள்ளை அடித்த எதிரிகளை பிடித்து விட்டதாக பேப்பரில் நான் தெரிந்து கொண்டேன்.
நான் இந்த சம்பவம் நடந்த உடன் இது தொடர்பாக எனது வீட்டில் பிரச்சனை நடந்ததால் நான் காசிக்கு சென்றுவிட்டேன். 1 ½ வருடம் கழித்து தான் வந்தேன்.
வந்து தருமபுரிக்கு எனது குடியிருப்பை மாற்றி கொண்டேன் அதன் பின்னிட்டு என்னிடம் பறிக்கப்டட பணம் மற்றும் நகைகளை போலீசார் கைப்பற்றியதை தெரிந்து கொண்டேன்.
நான் இன்றுவரை அந்த நகைகளை திருப்பி பெறவில்லை உடம்பு சரியில்லரதால் நான் திரும்ப பெறவில்லை
நான் நீதிமன்றத்தில் மனு செய்து அந்த நகைகளை திரும்ப பெற்று கொள்கிறேன்.
நான் எனது வண்டியையும் காவல் நிலையத்தில் இருந்து நான் திரும்ப பெறவில்லை.
இன்று நீதிமன்றத்தில் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள TVS Appachi TN 70 AF 5004 வண்டி என்னுடையது தான். அது எனது பெயரில் தான் உள்ளது.
போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.
இன்று நீதிமன்றத்தில் சாட்சியிடம் செயின்–1, பச்சை கல் வைத்த மோதிரம் மோதிரம் 1, கல் வைக்கதா 2 மோதிரங்கள், பிரேஸ்லட் –1 மற்றும் ரூ.12500, ரூ.2000 காண்பிக்கப்ட்டதில் நகை மற்றும் பணம் தன்னுடையது இல்லை என்று கூறியதால் அந்த நகை மற்றும் பணத்தை குறியீடு செய்ய இயலவில்லை.
நான் அணிந்திருந்த நகைகள் 2003 ல் என்னால் வாங்கப்பட்ட பழைய நகைகள் ஆகும்.
இன்று நீதிமன்றத்தில் புது நகைகள் காட்டப்படுகிறது.
இந்த சாட்சியின் மூலமாக இருசக்கர வண்டியின் புகைப்படம் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**1 முதல் 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

புகார் என்னால் எழுதி அளிக்கப்பட்டது.
நன் எனது புகாரில் எதிரிகள் சம்பவ இடத்தில் எனது வண்டியை எடுத்து சென்றதாக தான் கூறினேன்.
சாட்சியிடம் அவர் அளித்த புகார் காண்பிக்கப்பட்டு அதில் எதிரிகள் வண்டி எடுத்து சென்றது குறிப்பிட்டு கூறப்படவில்லை என்று கேட்ட போது சாட்சி நான் அளித்த புகார் இது இல்லை என்றும் என்னிடம் புகாரை தவிற அப்போது காவல் ஆய்வாளராக இருந்த திரு.சுப்ரமணியம் அவர் பதவியை பயன்படுத்தி எழுதப்படாத சில காய்தங்களில் எனது கையொப்பம் பெற்றார்.

நான் பேப்பரில் பார்த்து தான் எதிரிகளின் மூஞ்சை தெரிந்து கொண்டேன்.
நான் அதன் அடிப்படையில் தான் நீதிமன்றத்தில் காட்டினேன்.

**1 முதல் 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை மற்ற எதிரிகள் எதிரி 7 மற்றும் 8 தரப்பால் Adopted செய்யப்பட்டது.**

**ஒம்./—திரு.ஆர்.ஹரிஹரன்.,எம்.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**